அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 10/2022

எனது இல : EST-6/03/LEA/1060
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபை கள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2022.05.25

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**தற்போதுள்ள வளப் பற்றாக்குறையின் அடிப்படையில் அரச செலவுகளைக் குறைப்பதற்காக அரச நிறுவனங்களில் ஊழியர்களை சேவைக்கு அழைப்பதை மட்டுப்படுத்துதல்**

எரிபொருளை பெற்றுக்கொள்வது தொடர்பில் உருவாகியுள்ள பிரச்சினை காரணமாக பொது மற்றும் தனியார் போக்குவரத்து சேவைகள் உரிய முறையில் செயற்படாதமையால் அரச உத்தியோகத்தர்கள் சேவைக்கு சமூகமளிப்பதில் கஷ்டங்களுக்கு முகம்கொடுக்க வேண்டியேற்பட்டுள்ளமை தொடர்பில் பல்வேறு தரப்புகளிலும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. மேலும் இந்த கஷ்டமான காலப்பகுதியில் எரிபொருள், மின்சாரம் மற்றும் நீர் என்பவற்றுக்கான அரச செலவுகளையும் மட்டுப்படுத்த வேண்டியுள்ளது.

02. மேற்படி விடயங்கள் தொடர்பில் 2022.05.23 ஆந் திகதி இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் ஆராயப்பட்டதுடன், அரசாங்க அலுவலகங்களால் பொது மக்களுக்கு வழங்கப்படும் சேவைகளுக்குப் பாதிப்பில்லாதவாறு அரசாங்க ஊழியர்களை வேலைக்கு அழைப்பதை மட்டுப்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மீண்டும் அறிவுறுத்தல்கள் வழங்கப்படும் வரை உங்களின் கீழ் உள்ள நிறுவனங்களால் வழங்கப்படும் பொதுமக்கள் சேவைகளை தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கு அத்தியவசியமாகத் தேவைப்படும் குறைந்த எண்ணிக்கையான உத்தியோகத்தர்களை மாத்திரம் 2022.05.26 ஆந் திகதி முதல் சேவைக்கு அழைப்பதற்குப் பொருத்தமான வேலைத்திட்டமொன்றை தயாரித்து நடைமுறைப்படுத்துமாறு அறியத்தருகிறேன்.

03. இதன்போது அரச செலவினங்களை முகாமைத்துவம் செய்வதற்காக மின்சாரம் மற்றும் எரிபொருளை சிக்கனமாகப் பயன்படுத்துவது தொடர்பாக வெளியிடப்பட்ட 2022.03.08 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை தொடர்பில் கவனம் செலுத்தி செயற்படுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

04. மேலும் அத்தியாவசிய அரச சேவைகளைப் பேணுவதற்கு இது தடையாக இருக்கக் கூடாது.

ஒப்பம்./ எம்.எம்.பி.கே. மாயாதுன்னெ
செயலாளர்
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபை கள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு